Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

17.04.2020 | 077 316 5555 | வெள்ளிக்கிழமை

## வெளிநாடுகளில் 59,000 இலங்கையர் பாதிப்பு

கொழும்பு, ஏப்.17
கொரோனா வைரஸ் தொற்றால் உலகின் பல நாடுகளும் முடக்கப்பட்டுள்ள நிலையில், 59 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

2

## அத்தியாவசியப் பொருள்களுக்கு யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடில்லை

யாழ்ப்பாணம், ஏப். 17
யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சதொசவில் போதுமானளவு பொருள்கள் கையிருப்பில் உள்ளதாகவும், பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை

2

# யாழ்ப்பாணத்தில் ஊரடங்கை இப்போதைக்கு தளர்த்தோம்


### பலாலியில் வைத்து பாதுகாப்புச் செயலர் திட்டவட்டம்



யாழ்ப்பாணம், ஏப். 17
கொரோனா வைரஸ் அச்சுறுத்தலிலிருந்து யாழ்.மாவட்ட மக்களைப் பாதுகாக்கும் கடமையை தேவகாரியமாக கருதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். எனவே மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, வைரஸ் பரவுவதை உரிய முறையில் கட்டுக்குள் கொண்டவரும்வரை ஊரடங்கு உத்தரவை வைத்திருக்கவேண்டிய நிலை ஏற்படும் இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்தார்.

2

## கொரோனா: இன்றும் 3



2

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 124 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப். 17
யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து நேற்றுமுன்தினம் வரையில் பாவனையாளர் நுகர்வோர் அதிகார சபைக்கு 124 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத்

2

## ரின் மீன், பருப்பு என்பவற்றின் கட்டுப்பாட்டு விலை தளர்வு

### வர்த்தமானி இன்னுமில்லை

யாழ்ப்பாணம், ஏப். 17
ரின் மீன் 100 ரூபாவுக்கும் பருப்பு 65 ரூபாவுக்கும் விற்பனை செய்யப் படவேண்டும் என்ற கட்டுப்பாட்டு விலை தளர்த்தப்பட்டுள்ளது. இருப்பினும் இது தொடர்பில் அரசு முன்னர் வெளியிட்ட வர்த்த

2

## 685 மில்லியன் ரூபாவுக்கு யாழ்ப்பாணத்தில் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஏப். 17
அரச மற்றும் தனியார் பங்களிப்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 685 மில்லியன் ரூபாவுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.
மாவட்டச் செயலகத்துக்கு 24 அமைப்புக்கள் மற்றும் தனி நபர்களால் கையளிக்கப்பட்ட 11.678 மில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதிகள்

2

## இடர்வலயம் தவிர்ந்த ஏனைய இடங்களில் திங்கட்கிழமை முதல் பகலில் ஊரடங்கைத் தளர்த்த முடிவு?

கொழும்பு, ஏப். 17
கொரோனா இடர் வலயத்தில் உள்ளடக்கப்படாத பகுதிகளில், எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம், பகலில் ஊரடங்குச் சட்டத்தை நீக்குவதற்கு அரசு கவனம் செலுத்தியுள்ளதாக கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

2

## கோப்பாய் பிரிவில் இரு நாள்களில் 50 பேர் கைது



யாழ்ப்பாணம், ஏப். 17
கோப்பாய் பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஊரடங்கை மீறி வீதிகளில் நடமாடினரென்று

2

## குருதிக் குழாய் மாற்றீடு வடக்கில் முதல் வெற்றி




கிளிநொச்சி,ஏப். 17
கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் முதன் முதலாக குருதிக் குழாய் மாற்றீடு சத்திர சிகிச்சை வெற்றிகரமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் எஸ் .மதிவாணன் மற்றும் மயக்க மருந்து நிபுணர்

2

## வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 2,574 பேர் யாழில் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17
வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 574 பேர் ஊரடங்குச் சட்டம் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிப் போக

2

## வடக்கில் எதிர்பார்த்தளவு கொரோனா இல்லை

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17
வடக்கில் கொரோனா நோய்த் தொற்று வீரியமாக இருக்கும் என்று நம்பினோம். நல்லவேளை அப்படி

2

# யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தந்த பாதுகாப்பு அமைச்சின் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண, பலாலி படைத் தலைமையகத்தில் முப்படைகள், பொலிஸார் மத்தியில் சிறப்புரையாற்றினார். அதன் நிறைவில் ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் கொரோனா வைரஸ் பரவக்கூடிய அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் யாழ்ப்பாணமும் உள்ளடங்குகின்றது. குறிப்பாக மூன்று, நான்கு நாள்களுக்கு முன்னர் ஒரே தடவையில் அதிகளவான தொற்றாளர்கள் இங்கு இனங்காணப்பட்டனர். எனவே, இது தொடர்பில் நாம் விழிப்பாக, அவதானமாகச் செயற்படவேண்டும். கொரோனாத் தொற்றால் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். களுத்துறை, கம்பஹா ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக மூன்றாமிடத்தில் யாழ்ப்பாணம் இருக்கின்றது.
சனத்தொகை அடிப்படையில் எடுத்துக்கொண்டால் யாழ்.மாவட்டத்தில் பெருமளவானோர் வாழ்கின்றனர். எனவே, இங்கு வாழும் அப்பாவி மக்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படுவதை காண நாம் விரும்பவில்லை.
ஆகவே, மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, வைரஸ் பரவுவதை உரிய முறையில் கட்டுக்குள் கொண்டவரும்வரை ஊரடங்கு உத்தரவை வைத்திருக்கவேண்டிய நிலை ஏற்படும்.
அதேவேளை, இனம், மதம் என்னவாக இருந்தாலும் நாம் அனைவரும் இலங்கையர்கள். இந்த நோயால் இலங்கையர் யாராவது உயிரிழப்பதையோ, நோய் தொற்றுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்படுவதையோ அரசு எதிர்பார்க்கவில்லை.
தேசிய பாதுகாப்பு என்பது தீவிரவாதத்துக்கு எதிரான பாதுகாப்பு, அந்நிய ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான பாதுகாப்பு மட்டும் அல்ல, பாரிய இடர்கள் ஏற்படும்போது அதிலிருந்து மக்களை பாதுகாக்கவேண்டும். அதேபோல் இதுபோன்ற தொற்று நோய் ஏற்பட்டு மக்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் பட்சத்தில் அதிலிருந்து மக்களைப் பாதுகாப்பதும் தேசிய பாதுகாப்புக்குள் உள்ளடங்குகின்றது.
அந்த வகையில் நாம் உங்களுக்காக (யாழ். மக்களுக்காக) அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். உங்களின் உடல் ஆரோக்கியத்தை, பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே எமது கடமை. அந்த கடமையை தேவகாரியத்தை விடவும் உயரிய சேவையாகக் கருதி செயற்படுத்திவருகின்றோம். எனவே, யாழ். மக்களிடம் இரண்டு கோரிக்கைகளை முன்வைக்கின்றேன். முதலாவது பாதுகாப்பு தரப்பு, சுகாதாரப் பிரிவுகளால் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கமைய வீட்டிலேயே இருங்கள். இரண்டாவது, உண்மையை சொல்லுங்கள். அதாவது எவருக்காவது நோய்த் தொற்று ஏற்பட்டால், எங்கு சென்றீர்கள், யாருடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டீர்கள் போன்ற தகவல்களை கூறுங்கள். அப்போதுதான் தனிமைப்படுத்தல் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். தற்போதைய சூழ்நிலையில் மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிக்கொண்டிருக்கும் எனது அதிகாரிகள், படையினர், பொலிஸார் ஆகியோரைப் பாராட்டி, புதுவருடத்தையொட்டி அவர்களுடன் கலந்துரையாடுவதற்கே யாழ். குடாநாட்டுக்கு வந்துள்ளேன்- என்றார். (ஒ,5,44)

## வெளிநாடுகளில் 59,000...

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளவர்களில் 21 ஆயிரத்து 575 பேர் மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கியுள்ளனர். மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட நிவாரண உதவிகள் வேலைத்திட்டத்தின் கீழ், இவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (க114)


## அத்தியாவசியப் பொருள்களுக்கு யாழ்ப்பாணத்தில்...

எனவும் தெரிவிக்கப்படுகின்றது.
சிவப்பு நாடு அரிசி 59 ஆயிரத்து 403 கிலோவும், சம்பா அரிசி 15 ஆயிரத்து 386 கிலோவும், வெள்ளைப் பச்சையரிசி 13 ஆயிரத்து 954 கிலோவும், திட்டல் 22 ஆயிரத்து 484 கிலோவும், கோதுமை மா 2 லட்சத்து 23 ஆயிரத்து 76 கிலோவும், பருப்பு 24 ஆயிரத்து 238 கிலோவும், சீனி ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 749 கிலோவும், ரின் மீன் 16 ஆயிரத்து 729, உருளைக் கிழங்கு 2 ஆயிரத்து 260 கிலோவும், பெரிய வெங்காயம் 677 கிலோவும், செத்தல் மிளகாய் 3 ஆயிரத்து 566 கிலோவும், கருவாடு 530 கிலோவும், பச்சைப் பயறு 4 ஆயிரத்து 310 கிலோவும் கையிருப்பில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)

## ரின் மீன், பருப்பு என்பவற்றின்...

மானி மீளப் பெறப்படவில்லை. ஆனாலும் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்ட முடிவுக்கு அமைவாக, ரின் மீன் 192 ரூபாவுக்கும், பருப்பு 134 ரூபாவுக்கும் நேற்றுமுதல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.
கடந்த மார்ச் மாதம் கொரோனாத் தொற்று ஏற்படத் தொடங்கிய பின்னர், வேட்பு மனுத் தாக்கல் நிறைவடைந்த பின்னர் ஜனாதிபதி கோத்தபாய நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில். ரின் மீன் 100 ரூபாவுக்கும், பருப்பு 65 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று அறிவித்திருந்தார். இதற்கு அமைவாக வர்த்தமானி வெளியிடப்பட்டது. அரசு அறிவித்த கட்டுப்பாட்டு விலைக்குப் பொருள்கள் விற்பனை செய்ய முடியாததால் அவற்றுக்கு நாடு முழுவதும் தட்டுப்பாடு நிலவியது. இந்த நிலையில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், ரின் மீன் மற்றும் பருப்புக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு இணக்கம் காணப்பட்டது. ஆனாலும் இதுவரை கட்டுப்பாட்டு விலை தொடர்பில் வெளியான வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டு புதிய வர்த்தமானி வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## கொரோனா...



யாழப்ப்பாணம், ஏப். 17
கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகிய மூன்று பேர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்தது.
அதன்படி இதுவரை கொரோனா தொற்றுக்கு இலக்காகியோரின் எண்ணிக்கை 241 ஆக அதிகரித்துள்ளது. தென்பகுதியில் மூவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## அதிகார சபைக்கு...

தெரிவிக்கப்படுகின்றது.
ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து நேற்றுமுன்தினம் வரையிலான காலப் பகுதியில் 279 வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் நுகர்வோர் அதிகார சபையினர் சோதனை மேற்கொண்டனர். மேலும் 124 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன. மேலும் 19 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஒ,5)

## திங்கட்கிழமை முதல் பகலில்...

தினமும் காலை 6 மணிக்கு ஊரடங்கு சட்டத்தை நீக்கி மீண்டும் இரவு 8 மணிக்கு நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் கொரோனா இடர் வலயமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்களில் தொடர்ந்தும் ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருக்கும் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.
காலை நேரங்களில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும் அரச பணிக்கு 20 வீதமான அரச ஊழியர்கள் மாத்திரமே அழைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. காலை 6 மணிக்கு ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டாலும் தனியார் துறையினர் பணி செய்வதற்கான நேரமாக காலை 10 மணி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
அரச மற்றும் தனியார் பிரிவின் அலுவலக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அனைத்து ஊழியர்களும் இரவு 8 மணிக்குள் அவர்கள் வீடுகளுக்குச் செல்ல வேண்டும் என்பதுடன், 8 மணியிலிருந்து காலை 6 மணி வரை மீண்டும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. (ஒ,5)

## இரு நாள்களில்

கடந்த இரு நாள்களில் 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
நாட்டில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஊரடங்கை மீறி வீதிகளில் நடமாடினர் மற்றும் அனுமதியின்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 50 பேர் கோப்பாய் பிரிவில் கைது செய்யப்பட்டுள்ளனர். (த-20)

## 2,574 பேர்

முடியாமல் யாழ்ப்பாணத்தில் அந்தரித்து வருகின்றனர். கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 229 பேரும், மன்னாரைச் சேர்ந்த 126 பேரும், வவுனியாவைச் சேர்ந்த 415 பேரும், முல்லைத்தீவைச் சேர்ந்த 298 பேரும், திருகோணமலையைச் சேர்ந்த 164 பேரும், மட்டக்களப்பைச் சேர்ந்த 391 பேரும், கிளிநொச்சியைச் சேர்ந்த 386 பேரும், புத்தளத்தைச் சேர்ந்த 119 பேரும், ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 446 பேரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் 199பேர் மாவட்டச் செயலகத்திலும், 2 ஆயிரத்து 375பேர் பிரதேச செயலகங்களிலும் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ5)

## குருதிக் குழாய் மாற்றீடு....

பணிக்குழுவினருடன் இணைந்து இந்தச் சிகிச்சையை வெற்றியடையச் செய்துள்ளனர். வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட முதலாவது வெற்றிகரமான குருதிக் குழாய் மாற்றீடுச் சத்திர சிகிச்சை இதுவாகும்.
குருதிக் குழாயில் ஏற்படும் அடைப்புக்களை சத்திர சிகிச்சை மூலம் சீர் செய்யும் சிகிச்சை முறையை மேற்கொள்வதற்கு குருதிக்குழாய் தொடர்பான சிறப்புச் சத்திர சிகிச்சை நிபுணர்களாலேயே முடியும். கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் அண்மையில் நியமனம் பெற்று வந்த மருத்துவ நிபுணரான மருத்துவர் எஸ் .மதிவாணன் இந்த சத்திர சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளார்.
69 வயதுடைய ஒருவருக்கு காலில் குருதிக்குழாயில் ஏற்பட்ட அடைப்பு, குருதிக் குழாய் மாற்றீடு சத்திர சிகிச்சையின் மூலம் சீர் செய்யப்பட்டுள்ளது. தற்போது அவர் ஆரோக்கியமாக உள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்தது. (ப-7)

## வடக்கில் எதிர்பார்த்தளவு....

நடைபெறவில்லை. அங்கு தொற்று அதிகரித்தால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சையளிக்கும் பிரிவை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தோம். தற்போது அவ்வாறான நிலைமை அங்கு காணப்படவில்லை. இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.
கொரோனா தொற்று நோயாளர்களுக்கு வடக்கில் சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகள் ஏதாவது ஆரம்பிக்கப்படவுள்ளதா என்று கேட்டதற்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் முதலாவது கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டபோது நாம் அச்சமடைந்தோம். மத ஆராதனைக் கூட்டத்தை நடத்திய மதபோதகரிடமிருந்தே அவருக்குத் தொற்று ஏற்பட்டிருந்தது. இதனால் வடக்கில் பலருக்கும் கொரோனா தொற்று ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். அப்படி தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் அவர்களுக்கு சிகிச்சையளிக்க யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அல்லது வடக்கில் தனியான இடத்தை தயார் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டோம். ஆனால் நாங்கள் நினைத்தவாறு வடக்கில் நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. வடக்கில் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்தே கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையோருக்கு தொற்றுக்குரிய அறிகுறிகள் தென்படவில்லை. அவர்கள் சுகதேகிகளாகவே இருக்கின்றனர் - என்றார். (ஒ,5,22)

# சுகாதார ஸ்தாபனத்துக்கான நிதியுதவியைத் தொடரவும்

## ட்ரம்பிடம் ரணில் கோரிக்கை



கொழும்பு, ஏப்.17

உலக சுகாதார ஸ்தாபனத்துக்கான நிதியுதவியை இடைநிறுத்துவது இலங்கை போன்ற நாடுகளை வெகுவாகப் பாதிக்கும். எனவே மனிதாபிமான ரீதியில் இந்தத் தீர்மானத்தை மறுபரிசீலனைக்கு உட்படுத்தி, நிதியுதவியைத் தொடர வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிடம், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலக சுகாதார ஸ்தாபனத்தின் மீது அமெரிக்காவால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தீவிர அவதானம் செலுத்தியிருக்கிறேன். அவை பாரதூரமானவை என்பதுடன், உரிய முறையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவையுமாகும். கொரோனா வைரஸ் தொற்றுநோய் நிலைமை காரணமாக உலகின் பெருமளவான நாடுகளைச் சேர்ந்த மக்களின் உயிர்கள் பலியாகியிருப்பதுடன், இதனால் பொருளாதாரத்திலும் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் காலத்தில் ஏற்படத்தக்க சர்வதேச சுகாதார மற்றும் பாதுகாப்பு நெருக்கடிகளுக்கான பூகோள தலைமைத்துவத்தை வழங்குவதற்கு அவசியமான செயற்பாடுகளை உலக சுகாதார ஸ்தாபனம் தற்போது மேற்கொண்டு வருகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்துக்கான நிதியுதவியாக வருடாந்தம் அமெரிக்காவின் வரி செலுத்துவோரால் 400 - 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்படுகின்றன. எனினும் அதற்கான நிதியுதவியை இடைநிறுத்துவதற்கு மேற்கொண்டிருக்கும் தீர்மானம், கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதை உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிதியுதவியுடன் முன்னெடுக்கும் இலங்கை போன்ற நாடுகளை வெகுவாகப் பாதிக்கும்.

எனவே மனிதாபிமான ரீதியில் உங்களது தீர்மானத்தை மறுபரிசீலனைக்கு உட்படுத்தி, உலக சுகாதார ஸ்தாபனத்துக்கான நிதி வழங்கலைத் தொடர வேண்டும். முறையான விசாரணைகளின் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (க)





# அடம்பனில் தொற்று நீக்கி

## இளைஞர்கள் முன்மாதிரி

மன்னார், ஏப்.17

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் பிரதேச இளைஞர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை கிருமி நீக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அடம்பன் பகுதியில் மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளான மாந்தை மேற்கு பிரதேச செயலகம், வங்கி , மருத்துவமனை, கடைகள் போன்றவற்றுக்கு கிருமிநாசினி விசிறப்பட்டது. இதில் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் எஸ். கேதீஸ்வரன் கலந்து கொண்டார். கொரோனாவை ஒழிப்பதற்கு முன்னுதாரணமாகச் செயற்பட்ட பிரதேச இளைஞர்களை மக்கள் பாராட்டினர். (ப-56)

# கைத்தொழில் துறை மீள ஆரம்பிக்கப்படும்

கொழும்பு, ஏப்.17

அபாய வலயங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் கைத்தொழில் துறையை மீள ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்றால் நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில், அபாயமற்ற பகுதிகளில் துறையின் செயற்பாடுகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் படி இலங்கை முதலீட்டு வாரியம் தனது உற்பத்தி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க முடிவு செய்துள்ளது.

அதன்படி, தொழிற்சாலைகளை இயக்குவதற்குத் தேவையான சட்ட அனுமதிகளைப் பெற ranjithd@boi.lk க்கு மின்னஞ்சல் அனுப்புமாறு இலங்கை முதலீட்டு சபைப் பணிப்பாளர் சஞ்சய மொஹட்டல கேட்டுள்ளார்.

படிப்படியாகத் தொழிற்துறையை மீள இயங்க வைத்து, பொருளாதாரத்தை வலுப்படுத்தும் அரசாங்கத்தின் முடிவை யடுத்து, முதலீட்டுச் சபையின் உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# ஊரடங்கு தளர்ந்ததும்..!

கிளிநொச்சி, ஏப். 17

ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவுசெய்வதில் நேற்றுத் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். வங்கி நடடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை பொலிஸ் ஊரடங்கு 19 மாவட்டங்களில் தளர்த்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-6)



# 6,000 பேக்கரிகளுக்கு இலங்கையில் பூட்டு

கொழும்பு, ஏப். 17

நாடு முழுவதும் கொரோனாத் தொற்று பரவிவருவதன் காரணமாக மொத்தமாக நாடுமுழுவதும் உள்ள 7ஆயிரம் பேக்கரிகளில் 6ஆயிரம் பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன. இதனால் ஒரு லட்சம் பேருக்கான வேலைவாய்ப்புக்கள் இல்லாமல் போயுள்ளன என்று இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நிர்க்கதி ஆகியுள்ளவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளபோதிலும் இதுவரை எந்தவித நிவாரணப் பணிகளும் கிடைக்கவில்லை என்று சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற் போது 10வீதமான உற்பத்திகளே மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் எவ்வித இலாபமும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-114)



# தோட்டத் தொழிலாளருக்கும் அரசாங்கம் உதவ வேண்டும்

## அமைச்சர் இராதாகிருஷ்ணன் கோரிக்கை

ஹற்றன், ஏப்.17

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட ஆயிரம் ரூபா கூட இழுபறியிலேயே இருந்து வருகின்றது. எனவே, தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் ஏதேனும் ஒரு வழியில் உதவி வழங்க வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான வீ.இராதாகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஹற்றனில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படும் என கொரோனா வருவதற்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், கொரோனாத் தாக்கத்தால் அதனை வழங்க முடியாமல் இருப்பதாக தற்போது அறிவிக்கப்படுகின்றது. தோட்டத் தொழிலாளர்கள் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தோட்ட நிர்வாகங்களால் 3 அல்லது 4 நாள்களே வேலை வழங்கப்படுகின்றது. இதனால் குறைந்தளவு சம்பளமே கிடைக்கின்றது. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள அவர்களுக்கு, அரசாங்கம் ஏதேனும் விதத்தில் மானிய அடிப்படையிலாவது உதவி வழங்கவேண்டும். அதேபோல் தோட்டப்பகுதிகளில் இருந்து கொழும்பு உட்பட வெளிமாவட்டங்களுக்கு தொழிலுக்குச் சென்றவர்கள், தொடர் ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வருமானம் இல்லை. எனவே, இவர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவேண்டும்- என்றார். (ப)

# பொலிஸாரிடம் மோசடி: உறுதிப்படுத்த 1996!

கொழும்பு, ஏப்.17

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களைப் போன்று, தம்மைக் காண்பித்து பொலிஸாரிடம் சிலர் மோசடி செய்துள்ளனர் என்று தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனவே இவ்வாறான நபர்கள் தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ள 1996 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவ்வாறானவர்கள் உத்தியோகபூர்வ சின்னத்துடன் அடையாள அட்டைகளையும் வைத்திருக்கின்றனர். இதையொத்த சம்பவங்கள் கடந்த காலங்களிலும் இடம்பெற்றுள்ளன. அவை உரிய அதிகார அமைப்புகளுக்கு புலனாய்வுக்காகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

எவரேனும் உத்தியோகத்தருக்கு அல்லது பொதுமக்களில் ஒருவருக்கு இவ்வாறான நபர்கள் என்று சந்தேகம் ஏற்பட்டால், அதுபற்றி 1996 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொண்டு அறிவிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பொருள் கொள்வனவுக்கு வவுனியாவில் சனக்கூட்டம்

வவுனியா, ஏப். 17

நான்கு நாள்களின் பின்னர் ஊரடங்கு தளர்த்தப்பட்டமையால் ,பொருள் கொள்வனவுக்காக வவுனியா நகரில் மக்கள் அதிகளவில் நேற்றுத் திரண்டனர். நகர சபையால் நகரை அண்டிய பகுதிகளிலும், காமினி மகா வித்தியாலய மைதானத்தினுள்ளும் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதனால் விவசாயிகள் குறித்த பகுதிகளில் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தியிருந்தனர்.

மேலும் மருந்தகங்கள், வங்கிகள், வியாபார நிலையங்களில் பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று தமது அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்திருந்தனர். (த-110)



# பிராணிகளுக்கு உணவு வழங்கல்

மன்னார், ஏப். 17

மன்னார் பொறியியலாளர் சங்கத்தினர், மன்னார் நகர்ப் பகுதியில் வசிக்கும் நாய், பூனை போன்ற பிராணிகளுக்கு உணவு , தண்ணீர் வழங்கும் நடவடிக்கையில் தினமும் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்கு காரணமாக உணவு மற்றும் தண்ணீரின்றி பல நாய்களும், பூனைகளும் மன்னார் நகரில் இறந்து போயுள்ளன. இதனையடுத்தே எஞ்சியுள்ள பிராணிகளைக் காப்பாற்றும் நோக்கோடு உணவு, தண்ணீர் என்பன அவற்றுக்கு வழங்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. (த-213)

# பழங்களுக்கு முதலிடம்!

மட்டக்களப்பு, ஏப். 17

தற்போது நிலவும் அதிகரித்த வெப்பம் காரணமாக, மட்டக்களப்பு நகர்ப் பகுதிகளில் பொதுமக்கள் நேற்று ஊரடங்கு தளர்த்தப்பட்ட போது, ஏனைய பொருள்களை விடவும் பழங்களைக் கொள்வனவு செய்வதிலேயே அதிக ஆர்வம் காட்டினர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்தது.

வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பழங்களின் விலைகள் மட்டக்களப்பில் சற்று அதிகமாகவே காணப்பட்டன. உள்ளூரில் உற்பத்திசெய்யப்படும் பழங்களின் விலை குறைவாகக் காணப்பட்டன.

இதேவேளை, பழ வியாபாரிகள் இந்தமுறை அதிகளவு நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர் என்று கூறினர். தங்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை எவ்வாறு ஈடுசெய்வது என்று தெரியாதுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (து)







# மது விற்பனை நிலையங்கள் கணக்கெடுப்பின் பின்னர் 'சீல்'

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாதுகாப்பு முன்னேற்பாடாக மது விற்பனை நிலையங்களில் இருப்புக் கணிப்பீடு செய்யப்பட்டு முத்திரையிடப்படுகின்றது என்று (சீல்) மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டம் தற்காலிகமாகத் தளர்த்தப்படும் மாவட்டங்களில் மது விற்பனை நிலையங்களைத் திறக்க அனுமதியில்லை என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்ட மாவட்டங்களில் மது விற்பனை நிலையங்கள் மதுவரித் திணைக்களத்தினரால் பூட்டப்பட்டு முத்திரையிடப்படுகின்றன.

சில நாள்களாக யாழ்ப்பாணத்தில் மது விற்பனை நிலையங்களில் உள்ள மதுபானங்களின் இருப்புக் கணக்கெடுக்கப்பட்டு முத்திரையிடப்படுகின்றன. இந்தப் பணி வலிகாமத்தில் நேற்று நடைபெற்றது. (து)

# முகக் கவசங்கள் கையளிப்பு

மன்னார், ஏப். 17

மன்னார் மாவட்ட 'சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்' படையினர் மன்னார் மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள் மற்றும் படைத்தரப்பினருக்கு வழங்கும் வகையில் முகக்கவசங்களை , மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸிடம் நேற்றுக் கையளித்தனர். (த-56)



கொரோனாவை ஒழிப்பதற்கு

# ஒருநாள் சம்பளத்தை வழங்க வடக்கு ஆசிரியர்களும் தயார்

கொடிகாமம், ஏப்.17

கொரோனா வைரஸை ஒழிப்பதற்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் ஒருநாள் சம்பளத்தை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று ஒழிப்புக்கு அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் ஆசிரியர்கள் தங்களின் ஒருநாள் கொடுப்பனவை கொவிட் 19 சுகாதார மற்றும் பாதுகாப்பு நிதியத்துக்கு அர்ப்பணிக்க வேண்டும் என கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும அண்மையில் கேட்டுக் கொண்டார். அதற்கமைய வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் கல்வி அதிகாரிகளுக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கலந்துரையாடலிலேயே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆசிரியர்களிடமிருந்து இவ்வாறு சேகரிக்கும் நிதியானது வடக்கு மாகாணத்தில் கொவிட் 19 நோய்த் தொற்றைத் தடுக்கும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் வேதனத்திலிருந்து கழிப்பனவை மேற்கொள்வதற்காக வலய ரீதியாக ஆசிரியர்களின் பங்களிப்புத் தொகையை உள்ளடக்கிய பெயர்ப்பட்டியலைத் தயாரித்து வன் ,மென் பிரதிகளாக சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இளங்கோவன் அறிவித்துள்ளார். (ப-159)

# இலங்கைக்கு உதவ பல நாடுகள் தயார்

கொழும்பு,ஏப்.17

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாட்டுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயார் என்று ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதி செயலணி அலரிமாளிகையில் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நேற்றுக் கூடியது.

இந்தச் சந்திப்பில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தவும், மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவு வழங்கத் தயார் என்று தூதுவர்கள் இதன்போது தெரிவித்தனர். (க)





# பவுசரில் வந்த கழிவு நீர் வயலுக்குள் பாய்ச்சல்!

## துர்நாற்றம் வீசுவதாக விசனம்

யாழ்ப்பாணம், ஏப். 17

சங்கரத்தை கேணியடி வைரவர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வயற் காணியில் தண்ணீர் பவுசரில் கொண்டு வரப்பட்ட கழிவுநீர் பாய்ச்சப்பட்டதால், அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தண்ணீர் பவுசர் ஒன்றில் கொண்டுவரப்பட்ட கழிவு தண்ணீர், சங்கரத்தை கேணியடி வைரவர் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள வயற் காணியில் பாய்ச்சப்பட்டது. அதனையடுத்து அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசிவருகின்றது.

இதுதொடர்பில் அந்த பவுசரில் வந்தவர்களிடம் கேட்டபோது, எள்ளுப் பயிருக்கு தண்ணீர் பாய்ச்சப்பட்டதாகத் தெரிவித்தனர். எனினும், அந்தக் காணியில் எந்தவொரு பயிர்ச் செய்கையும் செய்யப்படவில்லை. அதனால் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த)



# 'மாஸ்க்' அணியாதோரை திருப்பி அனுப்பிய படையினர்

மட்டக்களப்பு, ஏப்.17

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக் காலை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர், முகக் கவசம் அணியாமல் பொருள்கள் கொள்வனவுக்காக வீதிகளுக்கு வந்த மக்களை பாதுகாப்புப் படையினர் வீடுகளுக்கே திருப்பி அனுப்பினர். மட்டக்களப்பு வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலேயே, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர், பொருள் கொள்வனவுக்காக வீதிக்கு வரும் அனைவரும், முகக் கவசங்களைக் கட்டாயம் அணிந்து வர வேண்டும் என்று வாழைச்சேனைப் பொலிஸார் அறிவித்தல்களை விடுத்திருந்தனர். குறித்த பகுதிகளில் நேற்றையதினம் பொருள்கள் கொள்வனவுக்காக முகக் கவசம் அணியாமல் வருகை தந்த பொதுமக்களை, இராணுவத்தினர், பொலிஸார் தடுத்து நிறுத்தி அறிவுரைகள் வழங்கிய தோடு, முகக் கவசங்களை அணிந்து வருமாறு வீடுகளுக்குத் திருப்பி அனுப்பினர். (ப-114)

மட்டு. மாவட்டச் செயலரின் முயற்சியால்

# செய்கையாளர்களுக்கு கை கொடுத்தது அரசு

மட்டக்களப்பு. ஏப்.17

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவாமலிருக்க ஏற்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக மட்டக்களப்பு மாவட்ட மரக்கறிச் செய்கையாளர்களது உற்பத்திகள் சந்தைப்படுத்துவதில் ஏற்பட்ட அசௌகரியங்களைத் தவிர்க்க அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மாவட்டச் செயலர் திருமதி. கலாமதி பத்மராஜா அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவந்ததையடுத்தே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் பயனாக தற்பொழுது களுதாவளைப் பகுதியில் உருவாக்கப்பட்டுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தி னூடாக மாவட்டத்தின் உற்பத்திகளான மரக்கறிகள், பழவகைகள் கொள்வனவு செய்யும் பணிகள் திருப்திகரமாக நடைபெற்று வருகின்றன.(ஐ-150)

# காற்றாலை அமைக்கும் பணியை ஆரம்பிக்காதீர்

## மன்னார் பிரதேச சபை தீர்மானம்

தலைமன்னார், ஏப். 17

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி வேலைத் திட்டம் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இடை நிறுத்தப்பட்டு மீள ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், அந்த அனுமதியை வழங்கவேண்டாம் என்று மன்னார் பிரதேச சபை, மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது. மன்னார் பிரதேச சபையின் 25 ஆவது மாதாந்தக் கூட்டம் சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம். முஜாஹிர் தலைமையில் நடைபெற்றது. 21 உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

மன்னார் வீதியில் அமைந்துள்ள நடுக்குடாப் பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணி இடம்பெறுகின்றது. நாடு முழுவதும் சகல அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் இடைநிறுத்தப்பட்டு தொழில் நிலையங்களும் முடக்கப்பட்டுள்ளன. எனவே காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முன்னெடுப்புக்களை நாடு சீராகும் வரை நிறுத்த வேண்டும் என்று சபையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தில் வெளிநாட்டவரும் வெளிமாவட்டத்தவரும் ஈடுபட்டுள்ளனர். ஆகவே இது விடயமாக மன்னார் மாவட்டச் செயலர் மற்றும் செயலணிக் குழுவுக்கும் அறிவிப்பது என்றும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது. (த-60)





# கிளிநொச்சிக்கும் போனார் பாதுகாப்புச் செயலாளர்

யாழ்ப்பாணம், ஏப்.17

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ன இன்று கிளிநொச்சிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார். அவருடன் விமானப் படைத் தளபதியும் கிளிநொச்சிக்குச் சென்றிருந்தார்.

பலாலி விமான நிலையத்துக்கு விசேட விமானம் மூலம் இன்று காலை வருகைதந்த இவர்கள் அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் அங்கிருந்து உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி இரணைமடு 'நெலும் பியச' மண்டபத்துக்குச் சென்று கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

"கொரோனா வைரஸ் தாக்கத்தால் நாடு பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் முப்படையினர் ,பொலிஸார் ஆகியோர் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர். அவர்கள் தங்களின் விடுமுறையைப் பெற்றுக் கொள் ளாது, தமிழ் சிங்கள புதுவருடத்துக்குக் கூடச் செல்லாது கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அர்ப்பணிப்போடு பணியாற்றுகின்றனர். அதற்காக அவர்களுக்கு விசேடமாக நன்றி தெரிவிப்பதோடு, கள நிலைமைகளை ஆராயவும் இந்தப் பயணத்தை மேற்கொண்டேன்" என்று பாதுகாப்புச் செயலாளர் கலந்துரையாடலின் போது தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்டப் படைகளின் தளபதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கிளிநொச்சி டிப்போச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவத்தின் வெற்றி நினைவுத் தூபியின் மாதிரியை நினைவுப் பரிசாக வழங்கினார். (ப-214)



# மட்டக்களப்பிலும் 'சௌபாக்கியா'

## மாவட்டச் செயலாளர் நடவடிக்கை

மட்டக்களப்பு, ஏப்.17

மட்டக்களப்பில் அரசாங்கத்தின் சௌபாக்கியா திட்டத்தின்கீழ் வீட்டுத்தோட்டத்தில் ஆர்வமுள்ளவர்களுக்கு அதற்கான விதைகளைப் பெற்றுக் கொடுக்க மாவட்டச் செயலகம் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இந்த நடவடிக்கைக்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவட்டச் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டுதலில் மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தற்போது மரக்கறி மற்றும் பழமர செய்கைக்குக் கூடிய கவனம் எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த விசேட திட்டத்தில் வீட்டுத்தோட்ட மரக்கறிச் செய்கைக்கு ஆர்வம்காட்டும் குடும்பங்களுக்கு மரக்கறி விதைப் பைக்கற்றுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மாவட்டச் செயலகத்தின் அரச ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நேற்று மாவட்ட செயலக வளவில் மஹாவலி, விவசாய, நீர்ப்பாசன, கிராமிய அபிவிருத்தி அமைச்சு விவசாய திணைக்களத்தின் அனுசரணையில் மரக்கறி விதைப் பொதிகள் 14 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் வழங்குவதற்காக விவசாயத் திணைக்கள அதிகாரிகளால் மாவட்டச் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜாவிடம் கையளிக்கப்பட்டன.

மாவட்டத்தின் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள ஒவ்வொரு கிராம அலுவர் பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட வீட்டுத் தோட்டம் செய்வதில் ஆர்வமுள்ள 20 சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு இவ்விதைகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப)



# நெருக்கடிக்குள்ளும் பிரதேச சபை அமர்வு

மட்டக்களப்பு, ஏப்.17

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் 26 ஆவது சபை அமர்வு, சபையின் தவிசாளர் ஞா.யோகநாதன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கொரோனாத் தொற்றிலிருந்து, மக்களை எவ்வாறு பாதுகாப்பாக நடத்துவது, பிரதேசத்திலுள்ள அனைத்து பொதுச் சந்தைகளையும் மூடி கிராமங்கள் தோறும் காணப்படும் பொதுவிளையாட்டு மைதானங்களில் பாதுகாப்பான முறையில் பொலிஸ் ஊரடங்கு தளர்த்தப்படும் நாள்களில் மாத்திரம் மரக்கறி வியாபாரங்களை மேற்கொள்வதற்கு உரிய முயற்சிகளை எடுத்தல், பொது இடங்களில் கிருமி அழிப்பு நாசினிகளை விசிறுதல், நடமாடும் சிகை அலங்கார வேலைகளை மேற்கொள்ள அனுமதித்தல், உள்ளிட்ட பல தீர்மானங்கள் இதன்போது எடுக்கப்பட்டன.

பிரதேச மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பிலும், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் தவிசாளரிடையே வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-46)

# மூலோபாயத் திட்டம் இவ்வார இறுதியில்

கொழும்பு, ஏப்.17

பொருளாதார புத்தெழுச்சி மூலோபாயத் திட்டம் இந்த வார இறுதிக்குள் வெளியிடப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வீழ்ச்சிய டைந்துள்ள மக்கள் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்த பின்னர், பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள மூலோபாயத் திட்டம் வெளியிடப்படும் என்று ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-20)

# வாழைச்சேனையில் விதைப்பு ஆரம்பம்

வாழைச்சேனை, ஏப்.17

வாழைச்சேனையில் சிறுபோக விதைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன என்று கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதேச உத்தியோகத்தர் எம்.ஏ.ரஷீத் தெரிவித்தார். ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள போதும், எவ்வித தடையுமின்றி வெற்றி கரமாக விதைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

இம்முறை 3 ஆயிரத்து 100 விவசாயிகள் 14 ஆயிரத்து 300 ஏக்கர் நிலப்பரப்பில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று எம்.ஏ.ரஷீத் மேலும் தெரிவித்தார். (க-114)



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 17.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.